வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் இல்லாத நபர்களுக்கு

# நொடிப்பு நிலை விசாரணைக்கான பதிவு

## மையப்படுத்தப்பட்ட காட்சியக மேலாண்மை அமைப்பு சுய சேவை கணியகம் வழியாக பதிவு செய்தல்

SUPREME COURT
SINGAPORE

இந்த துண்டு வெளியீடு, மையப்படுத்தப்பட்ட காட்சியக மேலாண்மை அமைப்பு (CDMS) சுய சேவை கணியகம் வழி வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் இல்லாத நபர்கள் தங்கள் நொடிப்பு நிலை விசாரணைகளைப் பதிவு செய்ய உதவுவதற்கான, படிப்படியான ஒரு வழிகாட்டி.

சிங்கப்பூர் உச்ச நீதிமன்றத்தால் October 2018-ல் வெளியிடப்பட்டது. அச்சிடும் நேரத்தில் துண்டு வெளியீட்டிலுள்ள எல்லா தகவல்களும் சரி.

# பொருளடக்கம்


(I) அறிமுகம் **2**

(II) CDMS சுய சேவை கணியகங்கள், வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகள் மற்றும் நொடிப்பு நிலை விசாரணை அறைகள் இருக்கும் இடங்கள் **3**

(III) பதிவு கண்ணோட்டம் **5**

(IV) பதிவு செயல்முறை **6**

# (I) அறிமுகம்

நொடிப்பு நிலை விசாரணைகளில் சம்பந்தப்பட்ட நபர்கள், மையப்படுத்தப்பட்ட காட்சியக மேலாண்மை அமைப்பு (CDMS) சுய சேவை கணியகங்களில் தங்கள் வருகையைப் பதிவு செய்து வரிசை எண்ணை எடுக்கவேண்டும். உங்கள் வழக்கு விசாரிக்கப்பட தயார் நிலையில் இருக்கும்பொழுது, வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகளிலிருந்து மணியோசை எழும். அதோடு உங்கள் வரிசை எண் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். இதற்காக தயவுசெய்து இரண்டாம் மாடியிலுள்ள வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகளிருக்கும் “காத்திருக்கும்” இடத்தில் அமர்ந்திருங்கள். அதே மாடியிலுள்ள நொடிப்பு நிலை விசாரணை அறைகள் ஒன்றில் உங்கள் வழக்கு துணைப்பதிவாளர் ஒருவரால் விசாரிக்கப்படும்.



**மையப்படுத்தப்பட்ட காட்சியக மேலாண்மை அமைப்பு (CDMS) சுய சேவை கணியகம்**




**வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரை**


# (II) CDMS சுய சேவை கணியகங்கள், வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகள் மற்றும் நொடிப்பு நிலை வழக்கு அறைகள் இருக்கும் இடங்கள்

உச்ச நீதிமன்றத்தில் வெவ்வேறு மாடிகளில் மொத்தம் **7 CDMS** சுய சேவை கணியகங்கள் உள்ளன (★ என்று குறியிடப்பட்டுள்ளன). நொடிப்பு நிலை வழக்கு அறைகள் (■ என்று குறியிடப்பட்டுள்ளன) மற்றும் **3** வரிசை எண் வெளிபடுத்தும் திரைகள் (♦ என்று குறியிடப்பட்டுள்ளன) **2-ஆம்** மாடியில் உள்ளன. தயவுசெய்து கீழே உள்ள நிலதளத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைக் காணவும்:


**1 ஆம் மாடி**





**2 ஆம் மாடி**



## 3 ஆம் மாடி




## 4 ஆம் மாடி




## குறியீடு

★ **CDMS சுய சேவை கணியகங்கள்**



CDMS சுய சேவை கணியகங்கள், வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகள், நொடிப்பு நிலை விசாரணை அறைகள் இருக்கும் இடங்கள்

# (III) பதிவு கண்ணோட்டம்

கீழேயுள்ள வழிமுறை அட்டவணை நொடிப்பு நிலை வழக்குகளுக்காக வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் இல்லாத நபர்கள் பதிவு செய்வதற்கான பதிவு கண்ணோட்டத்தை காட்டுகிறது. படிப்படியான வழிகாட்டுதலுக்கு அடுத்த பகுதியைப் பாருங்கள்.



**CDMS கணியகத்தில் பதிவு**

**1**
**அடையாள அட்டை/ பாஸ்போர்ட்/ FIN எண் குறிப்பிடவும்**


**2**
**மொழிபெயர்ப்பாளர் (தேவையெனில்) தேர்வு செய்யுங்கள்**

**3**
**பதிவு நிறைவு செய்து வரிசை எண் தாள் எடுக்கவும்**


**4**
**வரிசை எண்கள் வெளிப்படுத்தும் திரைகளில் மணியோசையுடன் உங்கள் வரிசை எண் சிவப்பு நிறத்தில் மின்னும் வரை காத்திருக்கவும்**

**5**
**உங்கள் வரிசை எண் அழைக்கப் பட்டவுடன் அறைக்குச் செல்லவும்**


# (IV) பதிவு செயல்முறை




**படி 1**
திரையைத் தொடவும்





**படி 2**
“நொடிப்புநிலை வழக்குகள்” **[Bankruptcy Cases]**தேர்வு செய்யுங்கள்




**படி 3**
“நான் வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் இல்லாத நபர்” **[I am an unrepresented party]** தேர்வு செய்யுங்கள்

**படி 4**
உங்கள் அடையாள அட்டை[1] எண்ணை குறிப்பிடுங்கள்.
(அயல்நாட்டவர்கள், உங்கள் பாஸ்போர்ட் /FIN[1] எண்ணை குறிப்பிடுங்கள்)
“அடுத்தது” **[Next]** அழுத்துங்கள்


[1] உங்கள் சமன்ஸில் கொடுக்கப்பட்டிருக்கும் அடையாள எண்ணை குறிப்பிடுங்கள். அவ்வாறு குறிப்பிட்டு பிழை என்று தகவல் வந்தால், தயவுசெய்து (2-ம் மாடியிலுள்ள) சட்ட பதிவகத்தின் முகப்பு 1-ல் அல்லது 2-ல் உதவி நாடுங்கள்.




**படி 5**

மொழிபெயர்ப்பாளரின் உதவி தேவையெனில் உங்களுக்கு ஏதுவான மொழியை தேர்வு செய்து “அடுத்தது” **[Next]**[2] அழுத்துங்கள்


மொழிபெயர்ப்பாளர் தேவையில்லை என்றால், “இல்லை” **[No]** தேர்வு செய்து, “அடுத்தது” **[Next]** அழுத்துங்கள்.




**படி 6**


வரிசை எண் பிறப்பிக்கப்பட்டு ஒரு வரிசை எண் தாள் அச்சிடப்படும்.
வரிசை எண் தாளை எடுத்து “முடிவு **[Finish]** அழுத்துங்கள்.

[2] உங்களுக்கு ஏதுவான மொழியின் மொழிபெயர்ப்பாளர் திரைப்பட்டியலில் இடம்பெறாவிட்டால் தயவுசெய்து (2-ஆம் மாடியிலுள்ள) சட்ட பதிவகத்தின் முகப்பு 1-ல் அல்லது 2-ல் உதவி நாடுங்கள்.


Supreme Court of Singapore
Queue Number
0203
Case No: HC/B 2520/2017
Judge/Registrar: Wong Li Tein
Venue: Chamber 2-2
Please keep this ticket and wait for your queue number to be called by the JO
24 May 2018 09:24:52

## படி 7

உங்கள் வரிசை எண்ணையும் அறை எண்ணையும் பார்த்துக் கொள்ளுங்கள்




## படி 8

உங்கள் வரிசை எண் அழைக்கப்படுவதற்கு வரிசை எண்கள் வெளிபடுத்தும் திரைகள் இருக்கும் இடத்தில் அமர்ந்திருங்கள். (இருக்குமிடமறிய பக்கம் 3-ஐ பார்க்கவும்). வரிசை எண்கள் வரிசை முறைப்படி[3] அழைக்கப்படமாட்டாது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.




## படி 9

புதிய வரிசை எண் அழைக்கப்படும்போது "இப்போது" **["Now"]** என்ற நெடுவரிசையில் அந்த எண் சிவப்பு நிறத்தில் மின்னும் அதோடு மணியோசையும் ஒலிக்கும்.

உங்கள் வரிசை எண் அழைக்கப்பட்டவுடன் உங்கள் படத்தைக்கொண்டுள்ள அடையாள பத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வரிசை எண் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள அறைக்குச் செல்லுங்கள்.

[3] வழக்கு நபர்களின் தயார்நிலையையும் அவரவர்களின் கோரிக்கைகளைப் பொருத்தும் வரிசை எண்கள் அழைக்கப்படுகின்றன

# நொடிப்பு நிலை நடவடிக்கைகளில் வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் இல்லாத நபர்களுக்கான பயனுள்ள தகவல்

நொடிப்பு நிலை வழக்கு விவகாரங்களுக்கான தகவல்களுக்கும் மற்றும்/அல்லது சட்ட உதவிக்கும் ஆலோசனைக்கும் தயவுசெய்து பின்வரும் சம்பந்தப்பட்ட முகவர்களின் இணையத் தளங்களைக் காணவும்:

| | |
|---|---|
| **உச்ச நீதிமன்றம்** | |
| நொடிப்புநிலை நடவடிக்கைகள் சார்ந்த தகவல்கள் | **இணையத் தளம்:** https://www.supremecourt.gov.sg/rules/court-processes/civil-proceedings/other-civil-proceedings-and-processes/bankruptcy-proceedings |
| **சட்ட அமைச்சு** | |
| நொடிப்புநிலை அலுவலகம், சட்ட அமைச்சு | **இணையத் தளம்:** https://www.mlaw.gov.sg/io |
| சட்ட உதவி இலாக்கா | சட்ட உதவி இலாக்கா, சிங்கப்பூரர்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும், விவாகரத்து, பிள்ளைகளது பாதுகாப்பு பொறுப்பு, தத்தெடுப்பு, தவறான பணி நீக்கம், நிர்வாகப் பத்திரம்/சான்றளிக்கப்பட்ட உயில், குத்தகை சச்சரவுகள், மற்றும் ஒப்பந்த உரிமைத் தீங்கு கோரிக்கைகள் போன்ற உரிமையியல் வழக்குகளில் சட்ட ஆலோசனை, உதவி மற்றும் ஆதரவு அளிக்கிறது.<br><br>**இணையத் தளம்:** https://www.mlaw.gov.sg/lab |
| கடன் மீட்டளிப்புத் திட்டம் **(DRS)** | DRS என்பது, நொடிப்புநிலை அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு கடன் மீட்டளிப்புத் திட்டம். $100,000 மேற்போகாத கடன் இருக்கும், முறைப்படியான வருமானமுள்ள கடனாளிகள், நொடிப்புநிலையை தவிர்க்க இத்திட்டம் உதவும்.<br><br>**இணையத் தளம்:** https://www.mlaw.gov.sg/content/io/en/bankruptcy-and-debt-repayment-scheme/debt-repayment-scheme.html |
| எங்களை தொடர்பு கொள்ளுங்கள் @ ஒன் மின்லோ | இணையத் தள விசாரிப்புப் படிவம்**:** https://www.mlaw.gov.sg/eservices/enquiry<br>தொலைபேசி**:** 1800-225-5529 |
| **சமூக நீதி மையம்** | |
| தளயிட சட்ட ஆலோசனைத் திட்டம் **(OSLA)** | ஒரு சிறப்பு நொடிப்புநிலை சட்ட உதவித்தளம் **உச்ச நீதிமன்றத்தின் 2-ஆம் மாடியில்** ஒவ்வொரு **வியாழக்கிழமையும்** பின்வரும் நேரங்களில் செயல்படுகிறது:<br>• காலை நேரத்தில் AM Session 10.00am – 12.30pm<br>• மதிய நேரத்தில் PM Session 2.30pm – 5.00pm<br><br>**இணையத் தளம்:**<br>https://cjc.org.sg/services/legal-services/on-site-legal-clinic-oslas<br>**தொலைபேசி:** 6557 4100<br>**மின் அஞ்சல்:** help@cjc.org.sg |
| **சிங்கப்பூர் கடன் ஆலோசனை சங்கம்** | |
| சிங்கப்பூர் கடன் ஆலோசனை சங்கம் | சிங்கப்பூர் கடன் ஆலோசனை சங்கம் பிணையம் பெறாத, சட்டப்பூர்வ பயனீட்டாளர் கடன் பிரச்சினையுள்ள நபர்களுக்கு உதவுவதில் நிபுணத்துவம் பெற்றது.<br><br>**இணையத் தளம்:** http://www.ccs.org.sg<br>**தொலைபேசி:** 6338 2663<br>**மின் அஞ்சல்:** enquiry@ccs.org.sg |
| **சிங்கப்பூர் வழக்கறிஞர் சங்கம்** | |
| இலவச (சட்ட) சேவைகள் அலுவலகம் | தனிப்பட்ட விவகாரங்களில் சட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி அதற்கு சட்ட ஆலோசனையோ வழக்கறிஞர் பிரதிநிதித்துவமோ கிடைக்கப்பெறாத நபர்களுக்கு இலவசமான அடிப்படை சட்ட ஆலோசனையை வழங்குகின்றது.<br><br>**இணையத் தளம்:** http://probono.lawsociety.org.sg<br>**தொலைபேசி:** 6536 0650<br>**மின் அஞ்சல்:** probonoservices@lawsoc.org.sg |

SUPREMECOURT
SINGAPORE